Registered as a News Paper     பக்கங்கள் 04     விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     வைகாசி 14     [27-05-93]     வியாழக்கிழமை     ஓசை 98

## அரச ஊழியர் சுகவீன லீவிற்கு தனியார்வைத்திய சான்றிதழ் ஏற்பு

சுகவீன லீவு தொடர்பாக அரச ஊழியர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆயுர்வேத, தனியார் வைத்தியச் சான்றிதழ்களை அரசாங்க வைத்தியர்களினால் வழங்கப்படும் சான்றிதழ்களைப் போன்று கருதி ஏற்கப்படவேண்டும் என கடந்த அக்டோபரில் வெளியிடப்பட்ட பொதுநிர்வாகச் சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் பொது நிர்வாக அமைச்சு பணித்துள்ளது.

மேலும் சுகவீன லீவு எடுக்கும் அரச ஊழியர்களும் இரு நாட்களுக்கு மேல் இச் சான்றிதழ்களை வழங்கலாம் எனவும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுகவீன லீவு தொடர்பாக பொது நிர்வாக அமைச்சினால் டிசெம்பர் 1986 இலும் மார்ச் 88 இலும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்படுவதாகவும் தாபனக் கோவையின் 12ஆம் அத்தியாயத்தின் 6ஆம் பிரிவில் இத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் [4ஆம் பக்கம் பார்க்க]

# தெரிவுக்குழுவை மீண்டும் கூட்ட மங்கள முனசிங்கா முயற்சி

## தமிழ்க் குழுக்களுக்கும் அழைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் சுமுகமான தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான சுதந்திரக்கட்சி எம். பி. திரு. மங்கள முனசிங்கா மீண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான தீர்வை முன்வைப்பதற்கு சகல தமிழ்க் குழுக்களுக்கும் முனசிங்கா அழைப்பு விடுத்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு கடந்த டிசம்பரில்முன் வைத்த தீர்வுத்திட்டத்தை அனைத்துத் தமிழ்க் குழுக்களும் நிராகரித்ததுடன் இத் தெரிவுக்குழுவில் தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாகக் கூறி அதிலிருந்து வெளியேறியமை தெரிந்ததே.

தெரிவுக் குழு உறுப்பினரிடையே வடக்கு - கிழக்கு இணைப்பே சிங்கள, தமிழ் அமைப்புகளிடையே முக்கிய முரண்பாடாக இருந்தமையும் சிங்களக் கட்சிகள் அனைத்தும் வடக்கு கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரித்தமையும் தமிழ்க் குழுக்கள் வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர்கள் விருப்பப்படி அதிகாரிகள் நியமனம்

## ஜனாதிபதி டி. பி. அனுமதி

(கொழும்பு)

அமைச்சர்கள் தாம் விரும்பும் அதிகாரிகளை நியமிப்பதற்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சுக்களின் சகல செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களே முழுப்பொறுப்பேற்கவேண்டும் என்று முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவித்தமையைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதற்கு வேண்டிய அதிகாரங்களையும் அனுமதியையும் ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்கா அமைச்சர்களுக்கு வழங்கியுள்ளார்.

இதன் அடிப்படையில் ரூபவாகினி, வானொலி நிலையங்களுக்கான புதிய தலைவர்களை தகவல்துறை அமைச்சர் டபிள்யூ ஜே எம்.லொக்குபண்டார நியமித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக குமன் அபயசிங்காவும் ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக பீற்றர் ஏ. அபயசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அகதிகளை கட்டுப்படுத்த ஜேர்மன், பிரான்ஸ் முயற்சி

(லண்டன்)

ஜேர்மனி பிரான்ஸ்உட்பட, ஐரோப்பிய நாடுகளினுள் அகதிகள் குடியேறுவதை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்கள் அமுல்செய்யப்படவுள்ளன.

சட்டவிரோத குடியேற்றத்தை எவ்வாறு தடுக்கலாம் என ஆராய ஐரோப்பிய குடும்ப நாடுகளின் அமைச்சரவை அடுத்த வாரம் ஹெப்பனேக்கில் கூடுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர், சட்டவிரோதமாக தொழில்பார்க்கும் வெளிநாட்டவரை கண்டு பிடிக்கவும் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றவும் ஆவன செய்யும்படி இப்போது பிரேரிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு தமிழ் குழுக்களின் ஆயுதங்களைகளையமுடிவு

(கொழும்பு)

கொழும்பு நகரில் இயங்கிவரும் ஈ. பி. டி. பி. மற்றும் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களைய அரசு முடிவெடுத்துள்ளது என ஐலண்ட் செய்து வெளிபிட்டுள்ளது.

அரசின் அனுமதி பெறாமல் தனிமனிதன் மற்றும் குழுக்கள ஆயுதங்களை தம் வசம் வைத்திருப்பதை அனுமதிக்க வேண்டாம் என்ற பணிப்புரை பாதுகாப்புப் படைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இனிப் பாதுகாப்புப் படையினரும் பொலிசாரும் மாத்திரம் ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

ஆயுதக்குழுக்கள் பல கொழும்பில் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது சம்பந்தமாகப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஆயுதபாணிகளான இந்தக் குழுக்கள் ஆயுதங்களைக் கைவிட மறுக்கும் பட்சத்தில் குழுக்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# டெலோ, ராணுவத்தினர் மீது பம்பைமடுவில புலிகள் தாக்கு

## 3 தேசவிரோதிகள் பலி; கவசவாகனம் சேதம்

(வவுனியா)

வெட்டை கிராமத்தில் பொது ... 7-15 மணியளவில் பம்பைமடு ... கிகள் கொல்லப்பட்டனர்.

தெரிவுக் குழு உறுப்பினர்

டையே வடக்கு - கிழக்கு இணைப்பே சிங்கள, தமிழ் அமைப்புகளிடையே முக்கிய முரண்பாடாக இருந்தமையும் சிங்களக் கட்சிகள் அனைத்தும் வடக்கு கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரிததமையும் தமிழ்க் குழுக்கள் வடக்கு-கிழக்கு இணைபபை வலியுறுத்தியமையும் குறிப்பிடத்தககது.

கொழும்பு நகரில் இயங்கி வரும் ஈ. பி. டி. பி. மற்றும் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களைய அரசு முடிவெடுத்துள்ளது என ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசின் அனுமதி பெறாமல் தனிமனிதன் மற்றும் குழுக்கள ஆயுதங்களை தம் வசம் வைத்திருப்பதை அனுமதிக்க

ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இனிப் பாதுகாப்புப் படையினரும் பொலிசாரும் மாத்திரம் ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

ஆயுதக்குழுக்கள் பல கொழும்பில் குற்ற நடவடிக்கைகளில் எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதபாணிகளான இந்தக் குழுக்கள் ஆயுதங்களைக் கைவிட மறுக்கும் பட்சத்தில் குழுக்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சர்கள் விருப்பப்படி அதிகாரிகள் நியமனம்

## ஜனாதிபதி டி. பி. அனுமதி

(கொழும்பு)

அமைச்சர்கள் தாம் விரும்பும் அதிகாரிகளை நியமிப்பதற்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சுக்களின் சகல செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களே முழுப்பொறுப் பேற்கவேண்டும் என்று முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவித்தமையைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதற்கு வேண்டிய அதிகாரங்களையும் அனுமதியையும் ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்கா அமைச்சர்களுக்கு வழங்கியுள்ளார்.

இதன் அடிப்படையில் ரூபவாகினி, வானொலி நிலையங்களுக்கான புதிய தலைவர்களை தகவல்துறை அமைச்சர் டபிள்யூ ஜே எம். லொக்கு பண்டார நியமித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக குமன் அபயசிங்காவும் ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக பீற்றர் ஏ. அபயசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# யாழ். வைத்தியசாலைக்கு ஜெனரேற்றர் பெற முயற்சி

## சர்வதேச அதிகாரி தகவல் அனுப்பினார்

(கொழும்பு)

யாழ். போதனா மருத்துவமனைக்குத் தேவையான இரண்டு மின்பிறப்பாக்கிகளை கொழும்பில் இருந்து எடுத்து வருவது குறித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக அவசர வானொலிச் செய்தி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி மேற்படி வானொலிச் செய்தியை கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அதேவேளை மேற்படி மின்பிறப்பாக்கிகளை உதிரிப்பாகங்களாக எடுத்து வருவதற்கு உரிய திட்டமொன்றையும் மேற்படி முயற்சியில் ஈடுபட்டவர்கள் வைத்திருப்பதாக தெரியவருகிறது. இதற்காக பொறியியலாளர் ஒருவரைக் கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

## மாதாந்தம் பா. உகளை சந்திக்க டி. பி. ஒழுங்கு

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி திரு டி. பி. விஜயதுங்கா மாதத்தில் ஒரு தடவை பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் புதிய நடைமுறை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது பாராளுமன்றக் கட்டடத்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

(வவுனியா)

வவுனியா பம்பைமடு கல்

**வீரச்சாவு**



வீரவேங்கை

**மலரோன்**

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்

[4ஆம் பக்கம் பார்க்க]

# ரெலோ, ராணுவத்தினர் மீது பம்பைமடுவில புலிகள் தாக்கு

## 3 தேசவிரோதிகள் பலி; கவசவாகனம் சேதம்

வெட்டை கிராமத்தில் பொது மக்களைக் கைதுசெய்து கொண்டு சென்ற ரெலோ தேசத்துரோகிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதலில் மூன்று ரெலோ தேசவிரோதிகள் கொல்லப்பட்டனர். இருவரின் உடல்களும், ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதேவேளை, அப்பகுதிக்கு கவசவாகனங்கள் சகிதம் வந்த சிறிலங்கா இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப் பட்டனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: நேற்றுக் காலை 7-15 மணியளவில் பம்பைமடு கல்வெட்டை என்ற கிராமத்தில் பொது மக்களைக் கைது செய்து சென்று கொண்டிருந்த ரெலோ தேசத்துரோகிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே திடீர் மோதல் ஏற்பட்டது.

இம்மோதலின் போது மூன்று ரெலோ தேசத்துரோகிகள் கொல்லப்பட்டனர். இவர்களில் இரண்டு ரெலோ தேசத்துரோகிகளின் உடல்களும் மற்றும் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டன,

இதேவேளை ரெலோ துரோகிகளால் கைதுசெய்து கொண்டுவரப்பட்ட பொது மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்

(வவுனியா)

வவுனியா பம்பைமடுப் பகுதியில் ரெலோ தேசத் துரோக கும்பலுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுக் காலை 7-15 மணிக்கு நடைபெற்ற மோதலின்போது சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேற்படி மோதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| ★ ஜி-3 ஏ-3 ரக துப்பாக்கி | 01 |
| ★ ரி-81 ரக துப்பாக்கி | 01 |
| ★ வோக்கி | 01 |
| ★ ஏரியல் | 01 |
| ★ கைக்குண்டு | 01 |
| ★ நடுத்தர ரவைகள் | 74 |
| ★ நேற்ரோ ரவைகள் | 79 |
| ★ ஜி-3 ஏ-3 ரவைக்கூடு | 05 |
| ★ ரி-81 ரக ரவைக்கூடு | 05 |
| ★ கோல்சர் | 02 |

# வெலிஓயா மோதலில் ஓர் இராணுவம் பலி

## 5பேர் படுகாயம்

(கொழும்பு)

வெலி ஓயாப் பகுதியில் கடந்த திங்களன்று இடம் பெற்ற மோதலில் ஓர் இராணுவம் பலியாகியதாகவும் ஐந்துஇராணுவத்தினர் காயமடைந்ததாகவும் கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

## பரீட்சை நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பயிற்சி ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பரீட்சை மற்றும் சிற்றூழியர் தரம் 3 இற்கு ஆட்சோப்பதற்கான பரீட்சைக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபங்கள் யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றப் பட்டுள்ளது.

எனவே பரீட்சார்த்திகள் இதனை கவனத்தில் கொண்டு இப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

# இரு நாட்டு இராணுவங்களை வென்ற புலிகளுடன் மோதுகிறேன்

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா

இலங்கையில் பல மாதம் தங்கியிருந்த இந்திய அமைதிப் படையினர் இலங்கை இராணுவத்தின் உதவியிருந்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒழிக்க முடியவில்லை. ஏன் அவ்வாறு செய்ய முடியவில்லை? இந்திய - இலங்கை இராணுவத்தினரின் உள்நோக்கங்களில் எவரும் சந்தேகப்படவில்லை. இரு நாட்டு இராணுவங்களால் செய்ய முடியாத பணியை மிக குறைந்த வசதியுடைய தமிழக பொலிசார் பெருமளவில் நிறைவேற்றியுள்ளனர். இவ்வாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று மத்திய உள்துறை அமைச்சர் சவானுக்கு எழுதியுள்ளகடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழக அரசியல் மற்றும சமூக அமைப்பிலிருந்து விடுதலைப் புலிகள் ஆதிக்கத்தை முற்றிலும் நீக்க தாம் உறுதி பூண்டுளளதாகவும் இதில் எநத மாற்றமும் இல்லை என்றும் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக எல்லா நடவடிக்கைகளையும் தமது அரசு எடுத்துள்ளதாகவும் அந்த அமைப்புடன் தான் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதாக சில அரசியல் வாதிகள் கூறுவது வேடிக்கையானது என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சிறையில் இருந்து மூன்றாவது முறையாகபுலிகள் உறுப்பினர் தப்பியிருப்பதாகவும் இதனால் தமிழக அரசில் சந்தேகம் தோன்றியுள்ளதாகவும் அமைச்சர் சவான் கூறியதற்கு ஜெயலலிதா தனது பதிலை கடிதத்தில் விரிவாக விளக்கியுள்ளார்.

மாமண்டூர் அருகே 3 தீவிரவாதிகள் தப்பியிருப்பது குறித்து விசாரணைக்கு உத்தர

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா கொலை விசாரணை 5 பிரிவுகள் தொடர்பு

சிறிலங்காவின் இரகசிய பொலிஸ் வரலாற்றில் ஆகக் கூடுதலாக இரகசியப் பொலிசார் ஜனாதிபதி பிரேமதாசா கொலை விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணைக்கென 5 பிரிவுகளாக இரகசியப் பொலிசார் இயங்குகின்றனர். ஒரு குழுவில் சுமார் 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு பொறுப்புகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

முதற் குழு கொலையாளியின் விபரங்களை திரட்டவும், இரண்டாவது குழு ஜனாதிபதியின் பாதுகாப்பு முறை பற்றி விசாரிக்கவும், மூன்றாவது குழு கொலையாளிக்கு உதவியவர்களைப் பற்றி விசாரிக்கவும் நான்காவது குழு கொலையாளியின் நெருங்கிய சகா எனக் கூறப்படும் நபரை கண்டு பிடிப்பதிலும், ஐந்தாவது குழு குண்டுவெடிப்பு நடந்த சூழல், இனந்தெரியாத சடலத்தின் பின்னணி ஆகியவற்றை விசாரணை செய்யவும் நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவிககப்படுகிறது.

## வரி விளம்பரம்

**துளிர்**

தமிழ்நாடு. புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405. அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்**

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள் றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)

**சுகாதார கருத்தரங்கு**

''தாய்சேய் நலம்'' என்னும் தலையகத்தில் ஒரு கருததரங்கு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் சகலரும் பங்கு பற்றிப்பயனடையுமாறு வலி வடக்குப் பிரதேச செயலர் திரு கா சந்திரராசா கேட்டுக் கொள்கின்றார்.

**வருடாந்த உற்சவம்**

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நேற்று கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 20-ம் திகதி இடம் பெறவுள்ள பூங்காவனத்திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவும். (பா)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் பாடசாலை மட்ட ஆசிரியர் தேவைகளைக் கருத்திற் கொண்டு ''கற்கை நெறியாக அரங்கு'' எனும் தலைப்பில் நாடகத்தினதும், அரங்கினதும் கல்வி சார் முக்கியத்துவம் பற்றிய ஒரு கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு நாளை பிற்பகல் 3 மணி தொடக்

## அறிவித்தல்

(23-05-93) ஞாயிற்றுக்கிழமை யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கொடிகாமம் கைத்தொழில் வர்த்தகசங்கத்தால் நடாத்தவிருந்த ★ கலைக் கதம்பமாலை ★ நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தால் அன்று நடாத்த முடியாமையால் இந்நிகழ்ச்சி இன்று (27-05-93) வியாழன் இரவு 8மணிக்கு யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

கைத்தொழில் வர்த்தக சங்கம்

[சி,6686) கொடிகாமம்.

வட இலங்கை சுதேசிய வைத்திய சபை

## விசேட பொதுக் கூட்டம்

சபையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும், லங்கா சித்தாயுர்வேதக் கல்லூரியின் அபிவிருத்தி சம்பந்தமாகவும் சபையின் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு 30-5-93 காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் சித்தாயுர்வேத அபிவிருததியில் அக்கறையுள்ளவர்கள் அனைவரையும் அழைககின்றோம்.

கௌரவ செயலாளர்,
வட இலங்கை சுதேச வைத்திய சபை.

[4974]

COUNCIL OF NGOO, JAFFNA.

வலுகுறைந்தோர் புனர்வாழ்வுக்கான வழிமுறைகளை இனங் காண்பதற்கான

## ஆய்வுப்பட்டறை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவில்நடைபெறவுள்ளமேற்படி ஆய்வுப்பட்டறையில்கலந்துகொள்ள விரும்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களின் பெயர் விபரங்களுடன் இணைய பணிமனையில் உள்ள படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து 31-05-93க்கு முன்எமக்கு அனுப்பி வைக்கவும்.

யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்;

100, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம. (சி/6682)

## 31-ம்நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேஷ்டி அழைப்பும்.



## ஆசிரியர் இடமாற்றம் பிரதேச அலுவலகத்திடம்

[கொழும்பு]

பிரதேச மட்டத்திற்கு கல்வி நிர்வாகப் பணிகள் மாற்றப்பட்டுள்ளதனால் இனி பிரதேச மட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்கள் சம்பளக் கொடுப்பனவுகள் பிரதேச கல்வி அலுவலகங்களே கவனிக்கும் என தெரியவருகின்றது'

## நூல்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்]

யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் எதிர்வரும் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவுளள ஈழத்து நூல் சஞ்சிகை ஓவியம் சிற்பம், புகைப்படம் மற்றும் சித்த மருத்துவக் கண்காட்சியில் ஈழத்து பிரசுரங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

இக்கண்காட்சியில் ஈழத்துப் பிரசுரங்களை விற்பனை செய்யவிரும்பும் படைப்பாளர்களும் வெளியீட்டாளர்களும் எதிர்வரும் 30 ஆம் திகதிககு முன் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா கேட்டுள்ளார்.

**சமுகம் தரவும்**

(யாழ்ப்பாணம்)

நிரந்தரநியமனம பெறத்தவறிய தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசரகூட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். பட்டப்படிப்பு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதுவரைகாலமும் கற்பித்து நிரந்தரநியமனம் பெறத்தவறிய அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தரும்படி சங்கம் அறிவித்துள்ளது.

**நூல் வெளியீடு**

[கொழும்புத்துறை]

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் அண்மையில் வெளியிட்ட ஆண்டு ஒன்பதிற்கான சைவநெறி வினாவிடை நூலை மன்றததின் செயலாளர் திரு. க சிவசங்கரநாதன் சம்பிரதாய முறையில் வெளியிட்டு வைத்தார். [24]

**வரவு மலர் வெளியீடு**

யாழ். இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் ''வரவு மலர் வெளியீட்டு விழா'' நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**வருடாந்த உற்சவம்**

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீடமன்றுளாடும் பெருமான் அருள்மிகு ஸ்ரீ விநாயக மூர்த்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமையும். தீர்த்த உற்சவம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூரணை தினத்தன்று காலை இடம்பெறும். (24)

**சித்திரக் கண்காட்சி**

யாழ் திருமறைக் கலாமன்ற கவின்கலைபயிலும் மாணவர்களின் சித்திரக் கண்காட்சி நாளைவெள்ளிக்கிழமைகாலை 10.00 மணிக்கு யாழ் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியை சித்திர பாட உதவிப் பணிப்பாளர் சிவசுப்பிரமணியம் (ரமணி) அவர்கள் ஆரம்பித்துவைப்பார் தொடர்ந்து 29 ஆம் திகதியும் இக்கண்காடசி நடைபெறவுள்ளது. (17)

**விளையாட்டு**

யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும்டொனால்ட்கிண்ண ஐம்பது ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளின் அரை இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 30 ஆம்திகதியும்அடுத்த மாதம் 1 ஆம் திகதியும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளன

முதல் நாள் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ் சப்றா அணியும், மறுநாள் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணியும் மோத உள்ளன.

இறுதிப்போட்டி அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெற உள்ளதாக யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக நிர்வாகி சி. விமலதாசன் தெரிவித்துள்ளார். [17]

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி

**புலோலி**

மாணவர் அனுமதியின்போது

## நன்கொடை அறவிடல் குறித்து ஆராயப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித் திணைக்கள அலுவலர்களின் கூட்டத்தில் மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்கும்பொழுது பெற்றோரிடமிருந்து நன்கொடைகள் வசூலிப்பது தொடர்பான விடயமும் ஆராயப்படவுள்ளது என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கூட்டம் வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். கல்வித்திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் காலை 9 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் இருநேரப் பாடசாலைகளை மீண்டும் அறிமுகம் செய்யும் வாய்ப்புகள் மற்றும் இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களை அவர்கள் தற்பொழுது கற்கும் பாடசாலைகளில் நிரந்தரமாக அனுமதித்தல் ஆகிய விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

## மாதாந்த இசை நிகழ்ச்சி ஞாயிறன்று நடைபெறும்

ஈழநாதம் மக்கள் தினசரியின் ஆதரவில் அகிலஇலங்கை இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் மாதாந்தஇசை நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிறன்றுமாலை 5 மணியளவில் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கே ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் செ. பத்மநாதன் கலந்து கொள்வார்.

செல்வி சிவகலா சிவஞானத்தின் வயலின் இசை விருந்தும். செல்வி கனகாம்பரி பத்மநாதனின் இசைக்கச்சேரியும் இடம் பெறவிருப்பதுடன் சிறப்பு நிகழ்ச்சியாக கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும் ஊரெங்கும் போர்ப்பாட்டு என்னும் கிராமிய இசை நடன நிகழ்ச்சியும் இடம் பெறும்.

**வாளி விநியோகம்**

தொல்புரம் கமநல சேவை நிலையத்தினால் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வாளிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்படி வாளிகளை பெற விரும்பும் தொல்புரம், சுழிபுரம் மூளாய் பகுதி விவசாயிகள் வாளி ஒன்றுக்கு முற்பணமாக ரூபா இருநூறைச் செலுத்தி தொல்புரம் கமநலசேவை நிலையத்தில் பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-27

1982ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - தெல்லிப்பழையில் தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான-

பரநிருபசிங்கம் இறைகுமாரன் (அளவெட்டி- யாழ். )

சிவபாலசிங்கம் உமைகுமாரன் (அளவெட்டி - யாழ். )

1985ஆம் ஆண்டு பேரூந்தில் பயணம்செய்து கொண்டிருக்கையில் அனுராதபுரம் புத்தளம் வீதியில் சிறிலங்காப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்ட 02 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

முரளி (நவரத்தினம் ஜெயக்குமார் - 824 செல்வநாயக புரம் - திருமலை)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

ஹசன் ( - முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 2-வது நாளாக மேற்கொண்ட ஒபறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சா

நேற்று கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 20-ம் திகதி இடம் பெறவுள்ள பூங்காவனத்திரு விழாவுடன் மகோற்சவம் நிறைவும். (பா)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக நுண் கலைத்துறை மற்றும் பாட சாலை மட்ட ஆசிரியர் தேவை களைக் கருத்திற் கொண்டு ''கற்கை நெறியாக அரங்கு'' எனும் தலைப்பில் நாடகத்தி னதும், அரங்கினதும் கல்வி சார் முக்கியத்துவம் பற்றிய ஒரு கருத்தரங்கு நாளை யும். நாளை மறு தினமும் யாழ். பல்கலைக்கழக கைலா சபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது.

இக்கருத்தரங்கு நாளை பிற்பகல் 3 மணி தொடக் கம் 6 மணி வரையும், 29ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை ஆறு மணி வரையும் நடைபெறவுள்ளது. (பா)

### எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண் டுள்ள சிறிலங்கா ஆயுதப்படை யினர் தமது கரையோரக் காவல்நிலைகளிலிருந்துநேற்று முன்தினம்நண்பகல 12.15மணி யளவில் பொன்னாலைக் கடற் பரப்பில் தொழிலில் ஈடுபட் டிருந்த மீனவரை நோக்கி எறிகணை வீச்சினை மேற் கொண்டனர், இவ் எறிகணை கள் கடற்பரப்பில் வீழ்ந்து வெடித்தன.

மேலும் நேற்று முன்தினம் நண்பகல் 12-35 மணியளவில் வலிமேற்குப் பகுதி வான் பரப் பில் பறந்து வந்த சிறிலங்கா வான் படைக்குச் சொந்த மான குண்டுவீச்சு விமானம் ஒன்று சங்கானை, வட்டுக் கோட்டை தொல்புரம். அராலி ஆகியபகுதிகளின்மேல் தாழப் பறந்து மக்கள் குடியி ருப்புக்களை நோட்டம் இட் டுச் சென்றது. (41)

### படிவங்கள் பெறலாம்

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழகத்தில் மே 24ஆம் திகதியும், 25ஆம் திகதியும் வழங்கப்பட்ட பல் கலைக்கழக அனுமதிக்கான முதலாவது படிவங்களை பல் வேறு காரணங்களுக்காகப் பெறத் தவறிய மாணவர்கள் அவற்றை யாழ் பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொள்ள லாம் எனப் பதிவாளர் தெரி வித்துள்ளார்

மேலும் இப்படிவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு 180 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் தங்கள் பரீட் சைப் பெறுபேறு, மொத்தப் புள்ளி தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களு டன் நேரடியாகச் சென்று இப்படிவங்களைப் பெறலாம் எனப் பதிவாளர் தெரிவித் துள்ளார். [பா]

---

விரும்பும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களின் பெயர் விபரங்களுடன் இணைய பணிமனையில் உள்ள படிவங் களைப் பெற்று பூர்த்திசெய்து 31-05-93க்கு முன்எமக்கு அனுப்பி வைக்கவும்.

யாழ்மாவட்ட அரசசார்பற்ற
நிறுவனங்களின் இணையம்;


100, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம.

(சி/6682)

---

## 31-ம்நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேஷ்டி அழைப்பும்.

தோற்றம்:
27.05.1925



மறைவு:
01.05.1993

அமரர்

### சிவகுரு பொன்னம்பலம்

(Retd. Railway Head Guard)

ஐயா, நின் பொன்னுருவம் எம் கண்முன்னே!
உம் நினைவுகளோ... எம உயிருள்ளே!

01. 05. 93இல் வவுனியாவில் மாரடைப்பினால் கால மான எம் குடும்பத்தலைவரை எமக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் உதவிய வவுனியா உறவினர், நண்பர்கள்; வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தினர், புகையிரத நிலைய அதிபர் மற்றும் ஊழியர்களுக்கும்,

03 05 93 அன்று எமதில்லத்தில் நடைபெற்ற அன் னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமக்கு ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் சாத்தியும், மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எம் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்ப துடன்,

31. 05. 93 காலை 6 00 மணிக்கு எமதில்லத்தில் நடைபெறும் எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், அவரின் நினைவாக அன்றைய தினம் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைத்து உற்றார், உறவினர், நண்பர் களையும அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயா, என்றும் உங்கள் நினைவுகளில் வாழும்

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்'
பேரப்பிள்ளைகள்

'ராணி பவன்'
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு,
வல்வெட்டித்துறை.

(4962)

---

வெளியிட்ட ஆண்டு ஒன்பதிற் கான சைவநெறி வினாவிடை நூலை மன்றத்தின் செயலா ளர் திரு. க சிவசங்கரநாதன் சம்பிரதாய முறையில் வெளி யிட்டு வைத்தார். [24]

### வரவு மலர் வெளியீடு

யாழ். இந்துக்கல்லூரி வர்த் தக மாணவர் ஒன்றியத்தின் ''வரவு மலர் வெளியீட்டு விழா'' நாளை வெள்ளிக் கிழமை காலை 9 00 மணிக்கு யாழ். இந்து குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

வரும் 30 ஆம்திகதியும்அடுத்த மாதம் 1 ஆம் திகதியும் யாழ் மத்திய கல்லூரி மைதானத் தில் நடைபெற உள்ளன

முதல் நாள் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ் சப்றா அணி யும், மறுநாள் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து மானிப் பாய் பரிஸ் அணியும் மோத உள்ளன.

இறுதிப்போட்டி அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடை பெற உள்ளதாக யாழ் சென் றலைட்ஸ் விளையாட்டுக்கழக நிர்வாகி சி. விமலதாசன் தெரிவித்துள்ளார். [17]

---

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி

## புலோலி

1993 94-ம் ஆண்டிற்கான கலை, வணிக முதல் தேர்வுகளுக்கான வகுப்புகள் 5-ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. மாணவர்கள் உடன் பதிவு செய்யவும்.

புலோலி.


ஆ. வ. தங்கராஜா
பணிப்பாளர்

(4972)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 11 | | 27 |
| - | | - |
| 08 | | 04 |
| - | | - |
| 1964 | | 1993 |



## அமரர் திருமதி மதிவதனி தில்லைநாதன்

(ஆசிரியை யா/வேலாயுதம் மகாவித்தியாலயம் பருத்தித்துறை)

குறுகியகாலத்தில் அன்பினாலும், பண்பினாலும், ஆசிரி யர்களையும் மாணவர்களையும் கவர்ந்து ஆசியர்களுககே முன் உதாரணமாகத் திகழ்நது எம்மை சடுதியாக விட் டுப்பிரிந்த தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

யா/வேலாயுகம் ம வி.
அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்

(4966)

---

1982ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - தெல்லிப் பழையில் தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய் யப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான-

**பரநிருபசிங்கம் இறைகுமாரன்** (அளவெட்டி- யாழ். )

**சிவபாலசிங்கம் உமைகுமாரன்** (அளவெட்டி - யாழ். )

1985ஆம் ஆண்டு பேரூந்தில் பயணம்செய்து கொண்டிருக்கையில் அனுராதபுரம் புத்தளம் வீதியில் சிறிலங்காப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு உயிரு டன் எரிக்கப்பட்ட 02 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

**முரளி** (நவரத்தினம் ஜெயக்குமார் - 824 செல்வநாயக புரம் - திருமலை)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

**ஹசன்** ( - முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 2-வது நாளாக மேற்கொண்ட ஒபரேசன் லிபரேசன் நடவடிக் கையின் போது தொண்டமானாற்றுப் பகுதியில் சிறி லங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சா வெய்திய-

**தாசன்** (இராசையா உதயகுமார் - 134, 3-ம்கண்டம், கற்சிலைமடு- ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

இதே நடவடிக்கையின் போது வல்வெட்டித்துறை யில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிக ணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். யூசி** செல்லச்சாமி பிறேமானந்தன்- யூசி வீதி, மானாங்கனை, வல்வெட்டித்துறை-யாழ் )

இதே நடவடிக்கையின் போது கம்பர்மலைப் பகுதி யில் விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 27 தமிழர்கள்.

யாழ் - தெல்லிப்பழையில் சிறிலங்கா இராணுவத் தினர் ' அம்புலன்ஸ்'' வண்டி ஒன்றின்மீது மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதி யில் இந்தியப்படையினரால் கைதாகி தேசவிரோத சக்தி களினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட,

**றொசான்** (உலகசேகரம் - பத்மநாதன் - சல்லித்தீவு, காரைதீவு - 02 - அம்பாறை)

இதே ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**நேசன்** ( - காரைதீவு - அம்பாறை )

**விஜி** ( - திருமலை)

சாவகச்சேரி - சங்கத்தானை சப்பச்சிப் பகுதியில் இந் தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**புறொப்ளர்** (சிவயோகராசா குணராசா - கச்சாய் தெற்கு - கொடிகாமம் - யாழ். )

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு- தேவிபுரம் பகுதியில் இந்தியப்படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**செந்தூரன்** (உமாபதி சத்தியகுமார்- 315, மணிக் கூட்டு வீதி, யாழ். )

மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப்படையி னரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரஜைகள்குழுத்தலைவர்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6685)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உன்னிடம் இருப்பவற்றில் சிறந்ததை நாட்டுக்கு கொடு உயர்ந்தது உனக்கு திரும்ப வந்து சேரும்.

மேடலின் பிரிட்ஜஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## துயரின் பின் விருதலை

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமை ஆற்றுவதற்கென 15 ரஷ்ய டாக்டர்களை அழைக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதேவேளை, அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியை முடித்துக்கொண்ட இருபத்தியாறு வைத்திய மாணவர்களில் பத்துப்பேர் மட்டும், இங்கே கடமை புரிய முன்வந்துள்ள வேளையில், ஏனைய 16 பேரும், வெளியில் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் கடந்த சில வருடங்களாக டாக்டர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதை ஈடுசெய்வதற்கென டாக்டர்களை பாகிஸ்தான், கியூபா போன்ற நாடுகளில் இருந்து அழைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களின் சேவை குறித்து திருப்தி தெரிவிக்கப்படவில்லை. அதிலும், இந் நாடுகளில் இருந்து அழைக்கப்பட்ட டாக்டர்கள் வடக்கு, கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள அதிலும், குறிப்பாக சிங்களவருக்குச் சேவை செய்யக்கூடிய வைத்தியசாலைகளிலேயே நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதாவது, வடக்கு - கிழக்கில் குறிப்பாக தமிழர் பிரதேசத்தில் காணப்படும் வைத்திய வசதிக் குறைவு பற்றியோ, அன்றி டாக்டர்கள் பற்றாக் குறை பற்றியோ அரசாங்கம் கவனம் எதுவும் எடுப்பதாக இல்லை. இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சி முடித்தவர்களே வெளிமாவட்டங்களுக்குச் செல்வதென்பது, பெரும் வேதனை அளிக்கும் விடயம் என்பதோடு, தமது மண்ணிற்கும், மக்களுக்கும் அவர்கள் தமது கடமையை நிறைவேற்றத் தவறுகின்றார்கள் என்பதும் முக்கியமானதாகும்.

ஒரு பிரதேசத்தில் உருவாகும் கல்வி மான்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் உட்பட்ட சகலரும் தமது தனித்துவமான முயற்சியினாலேயே தான் அந் நிலையினையோ, அன்றி அப் பதவியையோ அடைந்து விட்டதாகக் கருதிவிடக் கூடாது. அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள் ஓரளவிற்கு அதற்கு உதவியிருப்பினும் அவர்களுக்குரிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் வழங்கி

கொழும்பு அதிமேற்றாணியார்

# பிரேமாவை புகழ்ந்ததிற்கு கத்தோலிக்கர்கள் கவலை

[கொழும்பு]

பிரேமதாசா அரசின் ஜனசக்தித் திட்டத்தையும் சமூக நல சேவைகளையும் கொழும்பு அதிமேற்றாணியார் நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோ புகழ்ந்துரைத்தது தொடர்பாக சமூகநீதியில் அக்கறையுள்ள கத்தோலிக்க பொது நிலையினர் குழு கவலை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை குறித்து அதிமேற்றாணியார் வெளியிட்ட இரங்கல் செய்தி பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் கருத்துக்கு மாறானது என்று கத்தோலிக்க ஜன சகயோகித்த குழு அதிமேற்றாணியாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அவர் வெளியிட்ட அறிக்கையின் சில பகுதிகள் அதிகமான கிறிஸ்தவர்களுக்கு ஏற்புடையதல்ல. அதிமேற்றாணியார் தேசிய விவகாரங்களில் தமது தனிப்பட்ட கருத்தை வெளியிட உரிமையுண்டு. ஆனால் கத்தோலிக்க மக்களின் சார்பாகப் பேசும்போது அவர் பொதுநிலையினருடன் ஆலோசனைகளை கலந்த பின் தன் அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிமேற்றாணியார் அரச அதிகாரிகள் வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில் தமது கருத்தைத் தெரிவித்தாரா அல்லது தானே ஜனசக்தித் திட்டம் பற்றி ஆய்வு செய்து கருத்து வெளியிட்டாரா என்றும் அக்கடிதத்தில் கேட்கப் பட்டுள்ளது.

இதுபற்றி அதிமேற்றாணியாரின் கருத்தைச் செய்தியாளர் கேட்டபோது தமதுகருத்தைத் தெரிவிப்பதற்கு இக் குழுவிற்கு முழு உரிமையும் உள்ளது. நான் எனது சொந்தக் கருத்தைத்தான் வெளியிட்டேன். மற்றவர்களின் செல்வாக்கிற்கு ஆளாகி நான் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றார் அவர்.

கத்தோலிக்க ஜன சகயோகித்த குழு பெரும்பான்மைக் கத்தோலிக்கரின் கருத்தாகத் தான் வெளியிடுகிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## பெர்னாட் சொய்சா அவைத்தலைவர்

மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க மாகாண அமைச்சரவையை அமைப்பது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி வருகிறார். லங்கா சமசமாஜக்கட்சி தலைவர் பெர்னாட் சொய்சா மேல் மாகாணஅவை முதல்வராக தெரிவாகலாம் என்று கூறப்படுகிறது.

## வட-கிழக்கு ஆஸ்பத்திரிகளில் ரஷ்ய வைத்திய நிபுணர்கள்

(கொழும்பு)

வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை நிலவும் வடக்கு, கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு ரஷ்ய வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கென ரஷ்யாவிலிருந்து 15 வைத்திய நிபுணர்கள் வரவழைக்கப்படவுள்ளனர்.

இந்த வைத்திய நிபுணர்களை தெரிவு செய்ய வைத்திய சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் இவ்வாரம் ரஷ்யா செல்லவுள்ளார்.

## மோதிலால் நேரு தெரிவாகவில்லை

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து விலகி ஐ. தே. கவில் இணைந்து போட்டியிட்ட மோதிலால் நேரு மேல் மாகாண சபை உறுப்பினராக தெரிவாகவில்லை.

மோதிலால் நேரு 10,813 வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளார்.

## ஐ.தே. க. உறுப்பினருக்கு தொலைபேசி மிரட்டல்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களுடன் நெருங்கி ஒத்துழைத்த ஐ.தே.க மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் கிடைத்துள்ளது. இவரது இரு குழந்தைகளும் கடத்தப்படுவர் என மிரட்டலில் தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபை தேர்தலுக்கு பின்பே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதாக மோகான் வீரக்கோன் என்ற இவர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## ஆடைத் தொழிற்சாலை; ஊழல் மோசடிகள்

ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் 200 ஆடை தயாரிப்பு தொழிற்சாலைத் திட்டத்தில் வெளிநாட்டிலிருந்து துணிகளை இறக்குமதி செய்வதிலும் ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் இடம்பெற்ற மோசடிகளை ஆராய விசாரணைக்

இறக்குமதியானவற்றை கறுப்புச் சந்தையில் விற்பனை செய்ததாகவும், இதனால் சில ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் தேவையான அளவு ஆடைகளை தயாரிக்க முடியாத நிலையில் காணப்பட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தற்போது ஆடைத்தொழிற்

## தொண்டா மீது நம்பிக்கை

பதுளையில் தோட்ட இளைஞர்கள் பலர் கடந்த இருவருடங்களாக விசாரணை ஏதுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போதிலும் தோட்டத் தொழிலாளர்களும் இளைஞர்களும் தொண்டமான் மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளதை மாகாணசபை முடிவுகள் காட்டுகின்றன என பதுளை எம்.பி சென்னன் கூறினார்.

பெரிய நீலாவணையில்

## மண்ணினால் செய்த மிருகங்களின் சிலைகள்

(கொழும்பு)

பெரிய நீலாவணைக்கிராமத்தில் மண்ணினால் செய்யப்பட்ட யானை, பன்றி போன்ற மிருகங்களின் உருவங்கள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன

மிகவும் பழமைவாய்ந்த இச் சிலைகள் அப்பகுதி கிராம சேவக உத்தியோகஸ்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட அதிகாரிகளிடம் இருந்த

## பொலிஸ் இடமாற்ற அதிகாரங்கள் ரத்து

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகஸ்தர்களை இடமாற்றம் செய்வதற்கு பிரதி பொலிஸ்மா அதிபர்கள் சிரேஷ்ட பொலிஸ் அதிபர்கள் பொலிஸ் அதிபர்கள் ஆகியோரிடம் இருந்து வந்த அதிகாரங்கள் நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதி விடுத்த விசேட உத்தரவின் பேரில் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் 18ஆம் திகதிக்குப் பின்னர் அவ்விதம் இடம்பெற்ற இடமாற்றங்கள் யாவும் ரத்துச் செய்யப்பட்டு மாற்றப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களை மீண்டும் பழைய நிலையங்களிற்கே அனுப்ப வேண்டுமென்றும் இவ் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சு

## நிதி உதவி இல்லை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் விவசாய புனர்வாழ்வு கடன்களுக்கு பலர் விண்ணப்பித்த போதிலும் மேற்படி கடன்களை வழங்குவதை வங்கிகள் இடைநிறுத்தியுள்ளன.

கடன் வழங்க 141 லட்சம் ரூபா தேவையென வங்கி நிர்வாகம் அறிவித்தும் புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சு நிதியை வழங்கவில்லை.

## நீதிமன்றத்தில் மனு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய இரு மாகாணசபைகளது செயற்பாடுகளை இடைநிறுத்துமாறு கோரி எதிரணியினர் மனு தாக்கல் செய்துள்ளனர். வடமேல் மாகாணம், தென்மாகாணம் ஆகியவற்றின் செயற்பாடுகளை இடைநிறுத்தக்கோரியே எதிர்க்கட்சிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

பட்டப்பின்படிப்பு

## டிப்புளோமா பரீட்சை; தமிழ்மொழி ஒத்திவைப்பு

[கொழும்பு]

பட்டப்பின்படிப்புடிப்புளோமாபரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 29ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறஇருந்த மேற்படி பரீட்சையின் பகுதி 1 இற்கான தமிழ்மொழிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

## விசாரணையின் பின் விடுதலை

(கொழும்பு)

கந்தானையில் கைதான தமிழ் இளைஞர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர் என அப் பகுதி பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். கைதான 27இளைஞர்களும் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் விசாரணையின் பின் இவர்கள் விடுதலையாவர் என்றும் அவ்வதிகாரி கூறியதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## நிர்வாகசபை தெரிவு

வடஇலங்கை சுதேச வைத்திய சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்

## செஞ்சிலுவைத் தலைவர் பார்வையிட்டார்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களை மேற்படி சங்கத்தின் தலைமையகத்

சேவை செய்யக்கூடிய வைத்தியசாலைகளிலேயே நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதாவது, வடக்கு-கிழக்கில் குறிப்பாக தமிழர் பிரதேசத்தில் காணப்படும் வைத்திய வசதிக் குறைவு பற்றியோ, அன்றி டாக்டர்கள் பற்றாக்குறை பற்றியோ அரசாங்கம் கவனம் எதுவும் எடுப்பதாக இல்லை. இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சி முடித்தவர்களே வெளிமாவட்டங்களுக்குச் செல்வதென்பது, பெரும் வேதனை அளிக்கும் விடயம் என்பதோடு, தமது மண்ணிற்கும், மக்களுக்கும் அவர்கள் தமது கடமையை நிறைவேற்றத் தவறுகின்றார்கள் என்பதும் முக்கியமானதாகும்.

ஒரு பிரதேசத்தில் உருவாகும் கல்விமான்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் உட்பட்ட சகலரும் தமது தனித்துவமான முயற்சியினாலேயே தான் அந் நிலையினையோ, அன்றி அப்பதவியையோ அடைந்து விட்டதாகக் கருதிவிடக்கூடாது. அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள் ஓரளவிற்கு அதற்கு உதவியிருப்பினும் அவர்களுக்குரிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் வழங்கியவை அம் மண்ணில் உருவாக்கப்பட்ட வாய்ப்புக்களும், அம் மக்களின் நிதியுமே ஆகும்.

அதாவது, உலகில் பிறக்கும் அனைவரும் கல்விமானாகவோ, டாக்டராகவோ அன்றி பொறியியலாளர்களாகவோ வரமுடியாதுதான். ஆனால், இன்று உலகில் காணப்படும் பற்றாக்குறைக்குக் காரணம் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியான மனிதர்கள் உலகில் தோன்றவில்லை என்பதல்ல. தோன்றிய மனிதர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்கப்பெறாமை என்பதினாலேயே ஆகும்.

இந் நிலையிலேயே ஒரு பிரதேசத்தின் வாய்ப்பு வசதிகளை பெறுபவர்கள் அப் பிரதேசத்திற்கும் அவ் வாய்ப்பு வசதியை உருவாக்கி கொடுத்த மண்ணுக்கும், மக்களுக்கும் சேவை செய்யக்கடமைப்பட்டவர்கள் ஆகின்றார்கள். ஆகையால், ஒரு பிரதேசத்தின் வளத்தில் உருவானவர்கள் அப் பிரதேசத்திற்கு சேவை செய்யாமல் வெளியேறுவது என்பது ஒருவகையில் ஒரு பிரதேசத்தின் வளத்தை திருடிச் செல்வதற்கு ஒப்பானதே.

ஒரு தேசத்தின் விடுதலை என்பது இலகுவில் கிடைத்துவிடப் போவதில்லை. அது துன்பங்கள் துயரங்கள் நிறைந்த கரடுமுரடான பாதை. கடந்த 23 ஆம் திகதி நள்ளிரவு எரித்திரியா தனது சுதந்திர தேசியக்கொடியை ஏற்றியது. இச் சுதந்திரத்தை பெற அம் மக்கள் அடைந்த துன்பங்கள் எண்ணிலடங்காதவை. ஆனால், சகல மக்களும் ஒன்றிணைந்து போராடினார்கள். ஆண், பெண் என்ற பால் வேறுபாடு இன்றி, ஆசிரியர் மாணவர் என்ற தராதர வேறுபாடு இன்றி இடையர்கள் தொழில்நுட்பவியலாளர்கள் என்ற தொழில் வேறுபாடு இன்றி, துப்பரவு செய்பவர்கள் டாக்டர்கள் என்ற தகுதி வேறுபாடு இன்றிப் போராடினார்கள். தமது தேசத்திற்காக சகலரும் ஒன்றிணைந்து போராடினார்கள். துன்பத்தைக்கண்டு அவர்கள் தம் இனத்தைவிட்டோ, நாட்டைவிட்டோ ஓடவில்லை.

இதுவே அவர்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது, சிறிதுகாலம் ஏற்படும் துன்பங்கள், துயரங்களைக் கண்டு துவண்டிருந்தால் அவர்கள் வெற்றிபெற்றிருக்க முடியாது. இன்றைய சந்ததியினர் எதிர்கால சந்ததிக்காக தியாகங்கள் செய்தார்கள் தமது தேசத்திற்காக துன்பங்களைச் சுமந்து சேவை புரிந்தார்கள். அல்லாவிடின் அவர்கள் இன்று சுதந்திர மனிதர்களாக ஆகியிருக்க முடியாது. இது எமக்கும் நல்லதொரு பாடம்.

---

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களுடன் நெருங்கி ஒத்துழைத்த ஐ.தே.க மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் கிடைத்துள்ளது. இவரது இரு குழந்தைகளும் கடத்தப்படுவர் என மிரட்டலில் தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபை தேர்தலுக்கு பின்பே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதாக மோகான் வீரக்கோன் என்ற இவர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

---

செல்வாக்கிற்கு ஆளாகி நான் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றார் அவர்.

கத்தோலிக்க ஜன சகயோகித்த குழு பெரும்பான்மைக் கத்தோலிக்கரின் கருத்தாகத்தான் வெளியிடுகிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

---

பட்டப்பின்படிப்புடிப்புளோமாபரீட்சை ஒத்திவைக்கப்பட்

யாளர் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 29ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறஇருந்த மேற்படி பரீட்சையின் பகுதி 1 இற்கான தமிழ்மொழிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

---

## ஆடைத் தொழிற்சாலை; ஊழல் மோசடிகள்

### ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் 200 ஆடை தயாரிப்பு தொழிற்சாலைத் திட்டத்தில் வெளிநாட்டிலிருந்து துணிகளை இறக்குமதி செய்வதிலும் ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் இடம்பெற்ற மோசடிகளை ஆராய விசாரணைக் குழு அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி விஜயதுங்கவிற்கும் முதலீட்டுச் சபை அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்தே விசாரணைக்குழு அமைக்க முடிவு எடுக்கப்பட்டதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

துணிகளை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதியை ஆடை வர்த்தகத்தில் சம்பந்தப்பட்ட சில சக்திகள் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் இத்திட்டத்தின் கீழ் இறக்குமதியானவற்றை கறுப்புச் சந்தையில் விற்பனை செய்ததாகவும், இதனால் சில ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் தேவையான அளவு ஆடைகளை தயாரிக்க முடியாத நிலையில் காணப்பட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தற்போது ஆடைத்தொழிற்சாலையை அமைக்க செலவாகும் தொகையில் 60 சதவீதத்தை வங்கிகள் வழங்குகின்றன. வங்கிகளில் இருந்து பெற்ற பணம் மூலம் சில தொழிற்சாலை உரிமையாளர்களால் தரம் குறைந்த இயந்திர சாதனங்களையே கொள்வனவு செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய நிலைமைகளின்ல் 200 ஆடை தொழிற்சாலை திட்டத்தின் எதிர்காலம் கேள்விக்குரியதாகியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

---

## தொண்டா மீது நம்பிக்கை

பதுளையில் தோட்ட இளைஞர்கள் பலர் கடந்த இருவருடங்களாக விசாரணை ஏதுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோதிலும் தோட்டத் தொழிலாளர்களும் இளைஞர்களும் தொண்டமான் மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளதை மாகாணசபை முடிவுகள் காட்டுகின்றன என பதுளை எம்.பி சென்னன் கூறினார்.

## ஜனாதிபதியை சந்தித்தது

இராணுவ உயரதிகாரிகள் பலியான அராலித்துறை சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட வெளிநாட்டு பிரமுகர்கள் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கடந்த திங்கள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவை சந்தித்தது.

இச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

---

## விசாரணையின் பின் விடுதலை

(கொழும்பு)

கந்தானையில் கைதான தமிழ் இளைஞர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர் என அப்பகுதி பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். கைதான 27இளைஞர்களும் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் விசாரணையின் பின் இவர்கள் விடுதலையாவர் என்றும் அவ்வதிகாரி கூறியதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## நிர்வாகசபை தெரிவு

வடஇலங்கை சுதேச வைத்திய சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள லங்கா சித்தாயுர்வேத வைத்தியக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இக்கல்லூரியின் முன்னேற்றத்திற்காகவும் சித்தாயுர்வேத வைத்தியதுறையில் ஆர்வமுள்ள சகல வைத்தியர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றி தமது பங்களிப்பை வழங்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

---

## செஞ்சிலுவைத் தலைவர் பார்வையிட்டார்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களை மேற்படி சங்கத்தின் தலைமையகத் தலைவர் பார்வையிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். வந்த இச்சங்கத்தின் தலைவர் திரு. டி. டி. அபயசிங்கா அகதிகள் முகாம்கள் உட்பட, ஊரெழு தையற்பயிற்சி நிலையம் ஆகியவற்றையும் யாழ். கிளையின் உப-தலைவர் திரு. புவனேந்திரன் விமானப்படையினரது தாக்குதலால் கொல்லப்பட்ட இடத்தையும் சென்று பார்த்துள்ளார்.

---

# தமிழக அரசை கவிழ்க்கும் முயற்சிக்கு கண்டனம்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கொண்டிருந்த உறவு முறிந்து விட்ட ஒரே காரணத்துக்காக செல்வி ஜெயலலிதாவின் அரசைக் கவிழ்க்க இந்திரா காங்கிரஸ் கட்சி முயற்சி செய்கிறது என்றும், இம்முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதாகவும் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு கூறியுள்ளது.

இரு கட்சிகளுக்குமிடையே நல்லுறவு இருந்தவரை அ. தி. மு க. அரசின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு இந்திரா காங்கிரஸ் கட்சி ஒத்துழைத்து வந்ததாகவும் உறவு முறிந்தபின் விடுதலைப் புலிகளின் நடமாட்டம், சட்டம் ஒழுங்கு, சீர்குலைவு போன்ற காரணங்களைக் காட்டி வஞ்சம் தீர்த்துக் கொள்ள கட்சி முயற்சி செய்வதாகவும் மாக்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அக்கட்சியின் தமிழ்மாநிலக் குழுவின் செயலாளர் ஏ. நல்லசிவன் நேற்று முன்தினம்சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் உறவு வைத்துக் கொண்ட எல்லாக் கட்சிகளுக்குமே இதே அனுபவமே ஏற்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டது என்றும், இன்றும் அதே ஆயுதத்தைப் பயன்படுத்தி அ.தி.மு.க ஆட்சியை கவிழ்க்கஇந்திரா காங்கிரஸ் கட்சி முயற்சி செய்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றிருப்பதற்குசெல்விஜெயலலிதாதான் தார்மீக பொறுப்பு ஏற்கவேண்டும்என்றாலும் அவரது ஆட்சியைக் கலைக்க செய்யப்படும் முயற்சிக்கு ஜனநாயக சக்திகள் உடன் பட முடியாது என்றும் அவர் கூறினார்.

## தாவூத்தின் மாடிவீடு பம்பாயில் தகர்ப்பு

(பம்பாய்)

ஆறு அடுக்கு மாடிகளைக் கொண்ட மிஹிஸாபீன் மென்சன் கட்டடம் பலத்த பாதுகாப்பிலேயே தரைமட்டமாக்கப்பட்டது. இக்கட்டடமே பம்பாய் குண்டுவெடிப்பின் முக்கிய சந்தேக நபரான தாவூத் இப்ராஹீமிற்கு சொந்தமானதாகும். இவர் தமது தலைமையகத்தை டுபாயில் கொண்டிருந்தார்.

பம்பாயின் பக்மோடியா தெருவில் அமைந்திருந்த இக் கட்டடத்தை தரைமட்டமாக்க 500 பொலிசார், 7 இராணுவத்தினர், உயரதிகாரிகள் பங்குபற்றினர்.

தாவூத் இப்ராஹீமின் மனைவியின் சட்டத்தரணி ரின்டானி சுமார் 20 பெண்களுடன் மறியல் நடத்தியும் அது பலனளிக்கவில்லை நகரசபை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டதும் பெண்கள் ஓடிவிட்டனர்.

---

அ.தி.மு.கவை பதவிநீக்கும் முயற்சி

## காங்கிரஸ் கட்சிக்கு ஜனநாயக நம்பிக்கையில்லை

(சென்னை)

தமிழ் நாட்டில் அ.இ.அ.தி.மு க. ஆட்சியை பதவி நீக்கம் செய்வதான எந்த முயற்சியும் காங்கிரஸ் கட்சிக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்பதையே காட்டும்எனபாரதீய ஜனதாகட்சியின் தமிழ் நாடு பிரிவு தலைவர் டாக்டர் என். எஸ். சந்திரபோஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும்; ''மாநிலத்தில் புதிய ஆளுநர் பதவி ஏற்றவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைப் பதவி நீக்கம் செய்வது காங்கிரஸ் கட்சியின் கலாசாரம்'' என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், மாநில ஆளுநராக டாக்டர் சென்னாரெட்டி நியமிக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் அரசியல் நோக்கம் உள்ளது எனவும் அ.இ.அ.தி.மு.க அரசைக் கவிழ்ப்பதற்கு உரிய தருணம் வந்து விட்டதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியின் கூற்று ஒரு சந்தர்ப்பவாத அரசியல் எனவும் கூறியுள்ளார்.

## அரபுநாடுகளுக்கு சீனா ஏவுகணை விற்காது

(பீக்கிங்)

சீனா அரபு நாடுகளுடனும் இஸ்ரேலுடனும் நல்லுறவுகளை வைத்துள்ளது. சிரியாவிற்கோ, ஈரானுக்கோ சீனா ஏவுகணைகளை விற்பதில்லை என சீன வெளியுறவு அமைச்சர் சீனாவுக்கு விஜயம் செய்த இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பெரஸிடம் தெரிவித்தார்.

இந்திய விஜயத்தின் பின் சீனா வந்த இஸ்ரேலிய அமைச்சரிடம் சீன வெளிவிவகார அமைச்சர் தாம் அரபுநாடுகளுக்கு பாதுகாப்பிற்கான ஆயுதங்களை விற்பதாக கூறினார். அரபு நாடுகளுக்கு ஏவுகணைகள் விற்கப்படமாட்டாது என சீனா உத்தரவாதமளித்துள்ளது.

ஈழநாதம்

# நவாப் ஷெரீப்பை மீண்டும் பிரதமராக்க தீர்ப்பு

## பாகிஸ்தானில் புதிய சர்ச்சை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் உயர் நீதிமன்று முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை மீண்டும் பதவியில் நியமிக்கவும், பாராளுமன்றத்தை இயங்கவும் அனுமதி அளித்து தீர்ப்பளித்துள்ளது.

ஜனாதிபதி குலாம் இசாக் கான் கடந்த மாதம் தனது அரசை கலைத்ததற்கு எதிராக பிரதமர் ஷெரீப் தாக்கல் செய்த வழக்கு தொடர்பாக நேற்று நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது

விசாரணைகள் 21 நாள் நடைபெற்றன. தீர்ப்பினால் பாகிஸ்தான் அரசியலில் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது

நவாஸ் ஷெரீப் அரசை ஜனாதிபதி குலாம் இசாக்கான் பதவிநீக்கியபோது ஜனாதிபதி தனது அரசியல் சாசன அதிகார வரம்பையும் மீறி செயற்பட்டதாக பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. கடந்த வாரங்களில் இடைக்கால அரசினால் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் ரத்துசெய்யப்படவேண்டும என்றும் தீர்ப்பு கூறுகிறது

நீதிமன்ற தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு கோரி இடைக்கால அரசு தாக்கல் செய்த மனுவையும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்துவிட்டனர்.

இந்த நீதிமன்றத்தில் 13 நீதிபதிகள் பங்கேற்றனர்.

# வீரப்பனின் கண்ணிவெடி; புலிகளுக்கு தொடர்பில்லை

## கர்நாடக பொலிஸ் உயரதிகாரி தெரிவிப்பு

(சென்னை)

தமிழக-கர்நாடக பொலிஸ் தலைமை இயக்குநர்கள் நேற்றுக்காலை சேலத்தில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். வீரப்பன் குழுவைப் பிடிக்க இரு மாநிலங்களினதும் பொலிஸ் அதிரடிப்படையை பலப்படுத்துவதுகுறித்து இவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இதேசமயம் வீரப்பன் நடத்தும் கண்ணிவெடித் தாக்குதல்களில்விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இருக்க வாய்ப்பில்லைஎனகர்நாடகபொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீரப்பன் குழு நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் படுகாயமடைந்த கர்நாடக பொலிஸ் சுப்பிரின்டன் தேறிவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# அதிரடி படையுடன் மோதல் வீரப்பனின் 3 சகாக்கள் பலி

(டில்லி)

சந்தன மரக்கடத்தல் வீரப்பனின் கோஷ்டியினருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் பெரிய சண்டா காட்டுப் பகுதியில் கடும் மோதல் இடம் பெற்றது. இம்மோதலின் போது வீரப்பன் கோஷ்டியைச் சேர்ந்த மூவர் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கர்நாடக, தமிழக எல்லையில் அமைந்துள்ள பெரிய சண்டா காட்டுப் பகுதியில் உதவி பொலிஸ் இயக்குநர் தேவாரம் தலைமையிலான விசேட பொலிஸ் கோஷ்டியினர் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இம்மோதல் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

இம்மோதல் நடைபெற்ற இடத்திலிருந்து ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருள்களும் பெருமளவில்கைப்பற்றப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இறந்த மூவரது உடல்களையும் எடுத்து வந்து. வீரப்பன் கோஷ்டிபற்றி துப்புத்துலக்கப் போவதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

---

இரு நாட்டு

விடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தப்பியோடிய கிருபன் என்பவர் ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்படாதவர் எனக் குறிப்பிட்ட ஜெயலலிதா, சைதாப்பேட்டை சிறையிலிருந்து சார்ள்ஸ் நவாஸ் தப்பியது குறித்து குறிப்பிடுகையில், அச்சிறை மத்திய புலனாய்வுதுறை அதிகாரிகள் கண்காணிப்பில் இருந்ததாகவும் மாநில பொலிஸ் அதனுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். நவாஸ்,ராஜீவ் கொலையில் முக்கிய சாட்சியானால் அவரை மத்திய புலனாய்வுத்துறை சிறப்பு நடவடிக்கை எடுத்து பாதுகாத்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருச்செந்தூர் சம்பவம் குறித்து ஜெயலலிதா தனது கடிதத்தில் திருச்செந்தூர் சிறையிலிருந்து தப்பிய விஜயகுமார் இரு நாட்களில் சரணடைந்தார். அவர் எந்த வழக்கிலும் சம்பந்தப்படாத அகதி என்று குறிப்பிட்டுள்ளார்.

---

அரச ஊழியர்

இச்சுற்றறிக்கைமூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இதுவரை தனியார் ஆயுர்வேத வைத்தியர்களினால் வழங்கப்பட்ட வைத்திய சான்றிதழ்கள் 14 நாட்களுக்கு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இச் சுற்றறிக்கை மூலம் அரச வைத்தியர்களினால் வழங்கப்படும் வைத்தியச் சான்றிதழ்கள் போன்று தொடர்ந்தும் ஏற்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

---

வீரச்சாவு

குமிடையில் மணலாற்றுப்பகுதியில் திடீர் மோதல் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்திடீர்த் தாக்குதலினால் விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை மலரோனுக்கு (அழகுரத்தினம் சத்தியமூர்த்தி- உடையார்கட்டு முல்லைத்தீவு வீதி) தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

மாதாந்தம்

தொகுதியில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்த சந்திப்புக்காக கடமையில் இருப்பார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து சீரான முறையில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்காகவே அவர் இந்த ஏற்பாட்டை செய்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# எதிர்க்கட்சிகள் மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

வடமேல், தென் மாகாண சபை முதலமைச்சர் நியமனங்களை ரத்து செய்யுமாறு சுதந்திரக்கட்சி தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது எனினும் ஜூன் 3ஆம் திகதி மீண்டும் இது குறித்து விசாரணை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுவரையில் ஐ. தே. க. இந்த மாகாண சபைகளில் அமைச்சரவையை அமைக்கக் கூடாது என்று நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

---

ரெலோ

தப்பி ஓடிவிட்டனர்.

இதன் பின்னர் காலை 10 மணியளவில் 4 சாலடின் 2 ஆமட் கார்கள் சகிதம் அப்பகுதியை சோதனையிட வந்த 150க்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது.

30 நிமிட நேர சண்டையின் பின்னர் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் தமது சாலடின் வாகனத்தையும் இழுத்துக்கொண்டு பின்வாங்கிச் சென்றனர்.

## பண்ணைக் கரையில் இளைஞன் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணைக் கடற்கரையோரத்தில் அநாதரவாகக் கிடந்த ஒரு ஆணின் சடலத்தை தமிழீழ காவல்துறையினர் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று மாலை கரைஒதுங்கிய சுமார் 35 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞனின் சடலத்தைக் கண்டவர்கள் காவல் துறையினருக்கு கொடுத்த தகவலின்பேரில் ஸ்தலத்துக்கு சென்ற காவல்துறையினர் சடலத்தை மீட்டு அடையாளம் காண்பதற்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

---

உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும், கரவெட்டி பிரதேச செயலகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் மோதவுள்ளன. மேற்படி போட்டிகள் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும்.

# வட்டார கல்வி அதிகாரிமுறை மீண்டும் கொண்டு வரப்படும்

(கொழும்பு)

கல்வித்துறையில் சில மாற்றங்கள் செய்வது குறித்து கல்வித்துறை அதிகாரிகள் நடவடிக்கைகளை தற்போது எடுத்துவருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி மீண்டும் வட்டாரக்கல்வி அதிகாரிகள் முறை செயற்படுத்தப்படும். பாடசாலை நிர்வாகம் இவர்களிடம் ஒப்படைக்கப்படும். இதே சமயம் பாலர் கல்விமுறையிலும் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# 11ஆம் ஆண்டு நினைவு




ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

"இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்



மத்திய விளையாட்டுக் கழக நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

**முதலாவது பரிசு: 6532**

**இரண்டாவது பரிசு: 1356**

**மூன்றாவது பரிசு: 1112**

ஆறுதல் பரிசுகள்:- 394, 2175, 266, 58, 2106, 3885, 2769, 5276, 5061, 5948,

மேற்படி பரிசில்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் 10-06-93க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

ஒலிபெருக்கி உதவி செய்த செழியன் சவுண்ட் சேவிஸ் (கெருடாவில் தொண்டமானாறு), வாகன உதவி செய்த V வெள்ளையன்(அரசடி தொண்டமானாறு), ஒளி உதவி செய்த S. லவன் (ஆவரங்கால்) மற்றும் எமக்கு ஆதரவு தந்த சன சமூக நிலையங்கள்

இச் சுற்றறிக்கை மூலம் அரச வைத்தியர்களினால் வழங்கப் படும் வைத்தியச் சான்றிதழ் கள் போன்று தொடர்ந்தும் ஏற்கப்படும் என்பது குறிப்பி டத்தக்கது. (17)

மோதல் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

இம்மோதல் நடைபெற்ற இடத்திலிருந்து ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருள்களும் பெருமளவில்கைப்பற்றப்பட்ட

வேங்கை மலரோனுக்கு (அழகு ரத்தினம் சத்திய மூர்த்தி- உடையார்கட்டு முல்லைத்தீவு வீதி) தமிழீழ விடுதலைப் புலி கள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் கள் சகலரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து சீரான முறையில் கலந்துரையாடல் களை நடாத்துவதற்காகவே அவர் இந்த ஏற்பாட்டை செய்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

30 நிமிட நேர சண்டை யின் பின்னர் புலிகளின் தாக் குதலுக்கு ஈடுகொடுக்க முடி யாத சிறிலங்கா இராணுவத் தினர் பலத்த இழப்புகளுடன் தமது சாலடின் வாகனத்தை யும் இழுத்துக்கொண்டு பின் வாங்கிச் சென்றனர்.


# 11ஆம் ஆண்டு நினைவு



**உமா** **இறைவன்**

**உமைகுமாரன் இறைகுமாரன்**

**27-05-1982**

இணைந்தே பறந்த இலட்சியக் குயில்கள்
இளைப்பிலாப் பணிகள் இயற்றிடப் பனியில்
நனைந்தே நடந்த நலிவிலா நண்பர்
நாளும் பொழுதும் நற்றமிழ் ஈழம்
நினைந்தே செயலை நிகழ்த்திய தொண்டர்
நீசர் குண்டால் இறப்பினும் எம்மில்
கனிந்தே வாழும் மூச்செனக் கலந்த
காதல ரேநாம் கடிமலர் வைத்தோம்.

களங்கம் இல்லாக் காற்றிலே யிருவர்
கண்ணியக் குரலைக் கேட்கிறோம் மேலே
விளங்கும் கதிரின் விளக்கிலே யாண்மை
வீச்சை வியந்து நடக்கிறோம் உண்மை
துலங்கும் இருவர் தோழரென் பதனால்
தோள்கள் புடைத்து நடக்கிறோம் தண்மை
வழங்கும் முகிலாய் உயர்ந்தநும் முன்னே
வற்றாக் காதல் படைக்கிறோம் வாழி!

உமையே இறைவா உயிரா னவரே
உலரா மானப் பயிரா னவரே
விதையே விடிவின் திசையா னவரே
வளரும் நினைவில் பதிவா னவரே
பதினோராண்டின் நினைவுகள் கூறி
பனிமலர் தாளில் வைக்கிறோம் வாழி!

(4978)

**அளவெட்டி மகாசன சபை**

**ஸ்ரீதர் திரையரங்கில்**


முல்லை மாவட்டக் கலைஞர்களின்

## "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30, மாலை 4 மணி, 6 மணி

[சி-6688]


## மரண அறிவித்தல்



### இராஜகோபால்பிறேம்ஆனந்

மட்டக்களப்பு ஒந்தாச்சி மடத்தைப் பிறப்பிடமாக வும், 81, காரைக்காட்டு வீதி, வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவ ரும் இராஜகோபால் நாகம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வன் பிறேம் ஆனந் கொழும்பில் 23-05-93 இல் அகால மரணமானார். இவர் தேவகலா, தேவராஜன், பிறேம் ஆனந்தி, தர்மினி, றங்கராஜா, கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரராவார். ஈமக்கிரியைகள் 26-05-93இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறி யத் தருகின்றோம்.

தகவல்
ம. சிட்டிபாலா
(மைத்துனர்)

(4973)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 27 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



மத்திய விளையாட்டுக் கழக நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

**முதலாவது பரிசு: 6532**
**இரண்டாவது பரிசு: 1356**
**மூன்றாவது பரிசு: 1112**

ஆறுதல் பரிசுகள்:- 394, 2175, 266, 58, 2106, 3885, 2769, 5276, 5061, 5948,

மேற்படி பரிசில்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் 10-06-93க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

ஒலிபெருக்கி உதவி செய்த செழியன் சவுண்ட் சேவிஸ் (கெருடாவில் தொண்டமானாறு), வாகன உதவி செய்த V வெள்ளையன்(அரசடி தொண்டமானாறு), ஒளி உதவி செய்த S. லவன் (ஆவரங்கால்) மற்றும் எமக்கு ஆத ரவு தந்த சன சமூக நிலையங்கள், விளையாட்டுக் கழ கங்கள், பொதுமககள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

மத்திய விளையாட்டுக் கழகம்
ஆவரங்கால்.

(4979)

## பதவி வெற்றிடம்

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

**பொது முகாமையாளர் பதவி**

| | | |
|---|---|---|
| சம்பளம் | — | 1305 — 60x4 — 75x11 — 2370 |
| வயதெல்லை | — | 30 — 45 வரை |
| பிணை | — | ரொக்கம் ரூபா 10,000/- ஆதனம 25,000/- |
| முடிவு திகதி | — | 16-06-1993 |
| கல்வித்தகைமை | — | கூட்டுறவு வேலை ஆணைக்குழுச் சுற்று நிருபம் இல. 108 81இன் பொது முகாமையாளர் 101/6க்கு கோரப்பட்ட தகைமைகள். |

குறிப்பு:- கல்வித் தகைமை, ஏனைய விபரங்கள் சங்கப் பணிமனையில் அறியலாம்.

அனுப்பவேண்டிய விலாசம்:-

தலைவர்,
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி-6689)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9560

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-1185, 24-6161, 40-4484, 27-8999, 27-5535
28-3429, 24-1250, 28-1799, 28 3476, 24-7360
41-9530, 26-9626, 28-4550, 24-0336, 26-9703

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-2479, 28-1706, 28-7261, 22-3611, 42-1320